__சிறப்பு.__
__மிக அவசரம்/தனிக்கவனத்திற்கு__

**விடுநர்**

**டாக்டர். நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப.,**
நகராட்சி நிர்வாக ஆணையர்,
எழிலகம் இணைப்புக் கட்டிடம்,
சேப்பாக்கம்,
**__சென்னை–600 005.__**

பெறுநர்

அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (சென்னை மாநகராட்சி தவிர)
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்
அனைத்து 3ம் நிலை நகராட்சிகளின் செயல் அலுவலர்கள்.

**__ந.க.எண்.564/2007/டிபி3, நாள்:21.02.2008.__**

**ஐயா,**

**பொருள்:** **விளம்பரத் தட்டிகள்** – மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் – விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் போது வைக்கப்படும் விளம்பரத் தட்டிகள் – அகற்றுவது குறித்து.

**பார்வை:** தமிழ்நாடு அரசு செய்தி நாள் 21.2.2008.

''''''''''

தமிழ்நாட்டின் அனைத்து நகரங்களிலும் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்காக வைக்கப்படும் விளம்பரத் தட்டிகள், அவைகள் நடைபெறுவதற்கு முதல் மூன்று நாட்களுக்கும் முன்பும், நிகழ்ச்சிகள் நடைபெற்ற பிறகு இரண்டு நாட்களுக்கும் அனுமதிப்படும் என்று ஏற்கனவே அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அரசின் இந்த அறிவிப்புக்குப் பிறகும் ஒரு சிலர் தாங்கள் வைத்திடும் விளம்பரத் தட்டிகள் நிகழ்ச்சிகளுக்கு பல நாட்களுக்கு முன்பே வைத்தும், நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிந்த பிறகு பல நாட்களுக்கு அவைகளை எடுக்காமலும் தொடர்ந்து அந்த விளம்பரங்களை வைத்துள்ளார்கள் என்ற தகவல் அரசின் கவனத்திற்கு வந்துள்ளாதால், இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் இது குறித்து கூட்டிய கூட்டத்தில், இவ்வாறு முறைகேடாக வைக்கப்படும் விளம்பரத் தட்டிகளை அந்தந்த பகுதிகளிலே உள்ள காவல் துறையினரே அகற்றிடும் முயற்சியிலே ஈடுபடுவார்கள் என்றும், அதற்கான செலவினை அவைகளை வைத்திடும் அமைப்புகளிடமிருந்து பெறுவார்கள் என்றும் முடிவெடுத்து, பார்வையில் காணும் அரசு செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

எனவே, அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேல் வைக்கப்பட்டுள்ள விளம்பரத் தட்டிகளை அகற்றும்போது காவல் துறையினருக்கு தகுந்த ஒத்துழைப்பு நல்குமாறும், அறிவிப்பினை மீறி விளம்பரத் தட்டிகளை அகற்றாமல், அரசின் அறிவிப்பை மீறி நடப்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும், அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி ஆணையர்கள் மற்றும் 3ம் நிலை நகராட்சிகளின் செயல் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள், தங்களின் மண்டலத்தில் உள்ள நகராட்சிகளில் இது தொடர்பாக தக்க நடவடிக்கை எடுக்க கண்காணிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்கடிதத்தின் பெற்றமைக்கான ஏற்பளிப்பினை மறு அஞ்சலில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர்.

இணைப்பு:தமிழ்நாடு அரசு செய்திகுறிப்பு

நகல்:

1. அரசு செயலாளர்,
   உள் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை–600 009.
2. அரசு செயலாளர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும்
   குடிநீர் வழங்குத் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை–600 009.

# அரசு செய்தி வெளியீடு – 21.2.2008

தமிழ்நாட்டின் அனைத்து நகரங்களிலும், கிராமப்பகுதிகளிலும் விழாக்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்காக வைக்கப்படும் விளம்பரத் தட்டிகள், அவைகள் நடைபெறுவதற்கு முதல் மூன்று நாட்களுக்கு முன்பும்: நிகழ்ச்சிகள் நடைபெற்ற பிறகு இரண்டு நாட்களுக்கும் அனுமதிக்கப்படும் என்று ஏற்கனவே அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசின் இந்த அறிவிப்புக்குப் பிறகும் ஒரு சிலர் தாங்கள் வைத்திடும் விளம்பரத்தட்டிகளை நிகழ்ச்சிகளுக்கு பல நாட்களுக்கு முன்பே வைத்தும், நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிந்த பிறகு பல நாட்களுக்கு அவைகளை எடுக்காமலும் தொடர்ந்து அந்த விளம்பரங்களை வைத்துள்ளார்கள் என்ற தகவல் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. எனவே இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து கூட்டிய கூட்டத்தில், இவ்வாறு முறைகேடாக வைக்கப்படும் விளம்பரத் தட்டிகளை அந்தந்த பகுதிகளிலே உள்ள காவல் துறையினரே அகற்றிடும் முயற்சியிலே ஈடுபடுவார்கள் என்றும், அதற்கான செலவினை அவைகளை வைத்திடும் அமைப்புகளிடமிருந்து பெறுவார்கள் என்றும் முடிவெடுத்து அறிவிக்கப்படுகிறது. எனவே இத்தகைய விளம்பரத் தட்டிகளை வைப்போர் இனிமேலாவது அரசின் இந்த அறிவிப்பையேற்று அவர்களாகவே குறிப்பிட்ட நாட்களுக்கு மேலாக அவைகளை இடம் பெறச் செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த அறிவிப்பை மீறி நடப்பவர்கள் நகரின் அல்லது ஊரின் தூய்மையைக் கெடுக்க நினைப்போர் என்பது மாத்திரமல்லாமல் அவர்கள் மீது காவல் துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்று அரசு எச்சரிக்கை செய்கிறது.